DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, COONOOR

**Case No: STC No.331/2026**

Prosecution witness **PW.1 (LW.1)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | Prakash | Caste | : | |
| Father Name | : | Belli | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | 53 |
| Time | : | | | | |

**(A1 to A4 present. Accused counsel present)**
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of **01.07.2026**

**01.07.2026 முதல் விசாரணை** :

நான் தற்போது ஜெகதலாவில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. எதிரிகளுடன் நான் சமாதானமாக செல்கிறேன். எதிரிகளை இந்த வழக்கிலிருந்து விடுதலை செய்வதில் எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. என்னை இந்த வழக்கில் சமாதானமாக செல்ல சொல்லி யாரும் கட்டாயப்படுத்தவில்லை. கடந்த 27.02.2026 ம் தேதியன்று மாலை சுமார் 06.00 மணிக்கு நான் எங்கள் ஊரிலுள்ள எனது வீட்டின் அருகே நின்றுகொண்டிருந்த போது அடையாளம் தெரியாத 4, 5 நபர்கள் என்னை கெட்ட வார்த்தையால் திட்டி, கையால் அடித்து மிரட்டி சென்றார்கள். அந்த நேரம் இருட்டாக இருந்ததால் எனக்கு அந்த நபர்கள் யார் என்று அடையாளம் தெரியவில்லை. எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு நான் உதகை அரசு மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்தபோது அங்கு வந்த அருவங்காடு போலிசார் ஒரு பேப்பரில் என்னிடம் கையொப்பம் வாங்கி சென்றார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் என்னுடையது தான். (**புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). அதில் என்ன எழுதியுள்ளது என்று

தற்போது எனக்கு ஞாபகமில்லை. வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சியை பிறழ்சாட்சியாக கருதக்கோரி அரசு தரப்பு வேண்டுகோளுக்கிணங்க சாட்சி பிறழ்சாட்சியாக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.)**

போலீசார் விசாரணையில் கடந்த 27.02.2026 ம் தேதியன்று மாலை சுமார் 06.00 மணிக்கு நான் எங்கள் ஊரிலுள்ள ஓதனட்டி பிரிவில் நின்றுகொண்டிருந்த போது இவ்வழக்கின் எதிரிகள் அங்கு வந்து என்னை கெட்ட வார்த்தையால் திட்டி, கையால் அடித்து கொலை மிரட்டல் செய்தார்கள் என்றும், எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு நான் உதகை அரசு மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்தபோது அங்கு வந்த அருவங்காடு போலிசார் என்னை விசாரித்து புகார் வாக்குமூலம் வாங்கினார்கள் என்று கூறியுள்ளதற்கு முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தற்போது எதிரியுடன் சமாதானமாக சென்றுவிட்டு அடையாளம் தெரியாத நபர்கள் என்னை தாக்கியதாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** – இல்லை.

**மறுவிசாரணை** – இல்லை.

Sd/- Tmt.R.Geetha B.A. B.L.,
Judicial Magistrate (FAC),
Coonoor.